Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தி -ாசரி National Tamil Daily

மலர் 8 (16-3-66) இதழ் 37

விசுவாவசு பங்குனி 3 ஜுல்க: பிறை 22 புதன்கிழமை

## புதிய வகையிலமைந்த வீடமைப்புத்திட்டம்

கொழும்பு, செவ்வாய்

யாழ்ப்பாணம், நல்லூர், திருக்கோணமலை, மன்னர், நுவரேலியா, காலி, கண்டி, புத்தளம், ரத்கம, அம்பலாங்கொடை, கோட்டை ஆகிய நகரங்களில் புதிய வகையிலமைந்த வீடமை புத் திட்டத்தை அமுல்நடதத வீடமைப்புத் திட்ட மந்திரி ஜனுப் முகமது தீர்மானித்துள்ளார்

இத்திட்டத்தின்படி இப்பகுதிகளில் வீடற்ற ஒரளவு வசதியுள்ளவர்களுக்கு முடிக்குரிய காணிகள் வழங்கப்பட்டு அதில் வீடு கட்டிக்கொள்வதற்குத் தேவையான உபகரணங்களும், கடனுதவியும் வழங்கப்படும். இவர்கள் தாமாகவே வீடுகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

இதற்காக இப்பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்குப் பொருத்தமான முடிக்குரிய கா ணிகள் அளக்கப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளன.

பல்கலைக் கழகத்தில்

# 1968-ல் சுயபாஷையில் விஞ்ஞானம் போதனை

## கல்விமந்திரியின் திட்டம்

### பேராசிரியர், விரிவுரையாளர் அதிருப்தி

கொழும்பு, செவ்.

1968-ம் வருடத்திலிருந்து இலங்கைப் பல்கலைக் கழகத்தில் சுயபாஷைமூலம் விஞ்ஞானத்தைப் போதிப்பதற்கான திட்டத்தைக் கல்வி மந்திரி வரைந்துள்ளார்.

கல்விமந்திரி திரு. ஐ எம். ஆர். ஏ. இரியகொல்லையின் இத்திட்டம்பற்றி இலங்கைப் பல்கலைக் கழக வைத்திய விஞ்ஞான, எஞ்ஜினியரிங் பிரிவுகளைச் சேர்ந்த பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் அதிருப்தி கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

இவ்வித மாற்றம் பெரும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துமென்றும் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் சிங்களத்தில் அல்லது தமிழில் போதிக்கத் திறமை கொண்டுள்ளார்களா என்பதைவிட சுயபாஷையில் போதிப்பதற்கு இத்துறைகளில் எவ்வளவு நல்ல புத்தகங்கள் இருக்கின்றன என்பதுவே ஆராயப்படவேண்டிய விஷயம் என்றும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

மேற்படி திட்டப் தற்கொலைக்கு ஒப்பாகுமென்றும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

---

## இன பாரபட்சம் பற்றி ஆலோசிக்கப்படும்

வாஷிங்டன், மார்ச் 15

ஐ. நா.வின் மனிதஉரிமைகள் சபை வெகுவிரைவில் கூடி இன பாரபட்சம்பற்றி ஆலோசிக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது

இந்த ஆலோசனைகளின் பின்னர் இச்சபை உலக நாடுகள் அனைத்துக்குமான சில தீர்மானங்களை நிறைவேற்றக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 25 பேர் தான் இருப்பர்

ஜாகர்த்தா. மார்ச் 15

ஜெனரல் சுகர்ட்டோ அமைக்விருக்கும் அவசரகால மந்திரிசபையில் 25 பேர்தான் இருப்பார்கள் என்று இந்தோனேஷிய பத்திரிகை செய்தியொன்று கூறுகின்றது. ஏற்கனவே இருந்த மந்திரிசபையில் 100 பேர் இருந்ததாகவும் அந்த எண்ணிக்கையை வெகுவாகக் குறைத்து 25 பேருக்கு மேல் ஜெனரல் சுகர்ட்டோ நியமிக்க மாட்டார் என்றும் அப்பத்திரிகை கூறியது.

## போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் விசாரணை

கொழும்பு, செவ்வாய்

இடதுசாரிகள் சார்பான தொழிற்சங்கங்கள் தபாற் கந்தோர் வளவுக்குள் இரகசிய கூட்டமொன்றை நடத்தியது சம்பந்தமாக பார்லிமெண்டில் தெரிவிக்கப்பட்ட புகாரைத் தொடர்ந்து போஸ்மாஸ்டர் ஜெனரல் திரு. ஏ. எல். பெரேராவிசாரணை நடத்திவருகிறுர்.

## தந்தியோ தந்தி!

மாங்குளம், செவ்.

நயினமகுவைச்சேர்ந்த ஒருவர், சாவகச்சேரியில் கல்விபயிலும் தமது மகனுக்கு அனுப்பிய தந்தியொன்று, விசித்திரமான வார்த்தைகளுடன் அங்கு போய்க் கிடைத்திருக்கிறது.

''அந்தியேட்டிக்கு வருக'' என்று தந்தை அனுப்பிய தந்தி, ''அருவிவெட்டுவருக'' என்று குறிக்கப்பட்டு தனயனுக்குச் சேர்ந்திருக்கிறது. இந்தத் தந்தி புளியங்குளம் தபாற் கந்தோரிலிருந்து அனுப்பப்பட்டதாம்.

## பல்கலைக்கழகம்

பம்பலப்பிட்டி, செவ்.

வித்தியோதய பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பதவிக்கு பலர் போட்டியிடக் கூடுமென அறியப்படுகின்

## வடபகுதி எம். பி. க்கள் ராஜாங்க மந்திரியை சந்தித்தனர்

### வேலையில்ல பிரச்னை தீர்ப்பதற்கு யோசனை

கொழும்பு, செவ்.

வடபகுதி எம் பி களும் யாழ்ப்பாணமேயரும் இன்று ராஜாங்க மந்திரி திரு ஜே. ஆர் ஜெயவர்த்தனவைச்சந்தித்து வடபகுதியில்இளைஞர்கள் மத்தியில்வேலையில்லாப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான முயற்சிபற்றி பேச்சு வார்த்தை நடத்தினர்கள். வடபகுதியிலுள்ள வேலையற்றிருக்கும் பட்டதாரிகள்குறித்து எம் பிக்களும் மேயரும் மந்திரியின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

வடபகுதியிலுள்ள படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு குடியேற்ற விவசாயத் திட்டத்தில் இடம் கொடுக்க வேண்டுமென்று மந்திரிக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. தற்போதிருக்கும் குடியேற்றத் திட்ட இடங்களுக்கு நல்ல ரஸ்தாக்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படவேண்டுமெனவும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

இப் பேச்சு வார்த்தையின் போது கொழும்புக்கு வரும் வெளிநாட்டுக் கப்பல்களை யாழ்ப்பாணத்துக்கும் அனுப்ப வழிவகை செய்யவேண்டும் என்னும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

வடபகுதியில் வேலையில்லாத் திண்டாட்டப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் பற்றி விரிவான அறிக்கை தயாரித்துத் தருமாறு ராஜாங்கமந்திரி எம். பி.க்களையும் மேயரையும் கேட்டதாக அறியப்படுகிறது.

இப்பேச்சு வார்த்தையின் போது நிதிமந்திரி திரு. யு. பி. வன்னிநாயக்கா, உள்நாட்டமைச்சர் டாக்டர் தகநாயக்கா, காணிநீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி. சில்வா ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்

தென்மாகாண எம். பி. க்களும் மேயரும் ராஜாங்க மந்திரியை வேலையில்லாத் திண்டாட்டப்பிரச்னை தீர்ப்பது சம்பந்தமாக சந்தித்துப்பேசினர்.

## அரசாங்க அதிபர்களின் மூன்று நாள் மகாநாடு

### முக்கியகடமைகள் பற்றி ஆராயப்படும்

பம்பலப்பிட்டி, செவ்.

அரசாங்க அதிபர்களையும் பல்வேறு அமைச்சுகளையும் சேர்ந்த உயர்தர அதிகாரிகளையும் கொண்ட மகாநாடொன்றை நடத்தி அரசாங்க அதிபர்களின் பணிகள் பற்றி ஆராய்வதற்கு அரசாங்கம் உத்தேசித்திருப்பதாகத் தெரிகின்றது.

எந்தெந்த விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்பது பற்றி அரசாங்க அதிபர்களுக்கு அறிவுறுத்துவதே இந்த மகாநாட்டின் முக்கிய நோக்கமாகும் என்று அரசாங்க அதிகாரி ஒருவர் கூறினர்.

அமைச்சுக்கள் சம்பந்தப்பட்ட விஷயங்கள் குறித்து நடவடிக்கைகள் எடுக்கும் போது அரசாங்க அதிபர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் பற்றி கருத்துக்கள் தெரிவிக்கும்படியும் இந்த மகாநாட்டில் அதிபர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள் என்று அறியப்படுகின்றது. மகாநாட்டில் கலந்துகொள்வதற்காகவும் எல்லா அரசாங்க அதிபர்களுக்கும் கவர்னர் ஜெனரல் வில்லியம்கோபல்லவா விருந்தொன்றளிப்பார். மகாநாட்டின் இரண்டாம்நாள் தற்காலிகப் பிரதமமந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, அவர்களுக்கு விருந்தளிப்பார்.

அரசாங்கஅதிபர்கள் மகாநாட்டில் ஆலோசிக்கப்பட்டிருக்கும் முக்கிய அம்சங்களில்பின்வருவனவும் இடம் பெறக்கூடும் என்று கருதப்படுகிறது.

சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதில் ஏற்பட்டுவரும் சங்கடங்கள் அவசரகால நிலைமையின் போது பொலிஸ் ராணுவம் சம்பந்தப்பட்ட ஷயங்களில் அரசாங்க அதிபர்களின் கடமைகள், முன்னேற்றத் திட்டங்கள் பற்றிய விஷயங்கள், நிதி அம்சங்கள், உள்நாட்டு விவகாரங்கள், நில அபிவிருத்தி நீர்ப்பாசன விஷயங்கள், உணவு விவசாயம் பற்றிய அம்சங்கள்.

## 'சதிக்கும் எனக்கும் சம்பந்தமில்லை'

### செனட்சபையில் டொறிக் டி' சூசா

கொழும்பு, செவ்வாய்

பெப்ரவரி 17ந் தேதி இடம்பெற இருந்ததாகக் கருதப்படும் சதிபற்றித் தாம் எவருக்கும் கூறியது கிடையாதென்றும், தமக்கும் இதற்கும் எதுவித சம்பந்தமுமில்லையென்றும், சுதந்திரக்கட்சிக்கும் சமசமாஜக்கட்சிக்குமிடையே பிளவை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே தமது பெயரைத் தொடர்புபடுத்தியிருப்பதாகச் செனட்சபையில் இன்று பேசுகையில் செனட்டர் டொரிக் டீ சூசா கூறினர்.

திரு. டொறிக் டீ சூசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

அரசாங்கத்துக்கு எதிராக இராணுவத்தினரும் சிவிலியன்களும் சதிசெய்வதற்குத் திட்டமிட்டிருந்தார்களென்று நான் அரசாங்க ஊழியர் எவருக்கும் கூறவில்லை.

அரசாங்கத்துக்கு எதிராக ராணுவத்தினரும் சில சிவிலியன்களும் சதிசெய்வதற்குத் திட்டமிட்டிருந்தார்களென்று தாம் அரசாங்க ஊழியரொருவருக்குக் கூறியதும் அந்த அரசாங்க ஊழியர் அதை அரசாங்கத்துக்குத் தெரிவித்தாரெனக் கூறப்பட்டிருக்கிறது ராஜாங்க மந்திரி பத்திரிகைச் செய்திகளைப் பொதுவில் சரியில்லையென்று கூறியிருப்பதால் தாம் சொன்னதையெல்லாம் பொதுமக்கள் சரியென்று நம்புவார்கள் என்று எண்ணிவிடுவார்கள் என்பதாலேயே வெளியிடுகிறேன். 26ந் தேதி நகன்கிளப்பில் சொன்னதை நம்பியிருந்தால் இன்னும் பத்துத்தினம் முன்னதாகவே சதிபற்றி விசாரித்

(6-ம் பக்கம் பார்க்க)

நறுவ விமலதம்ம நாயக்க தேரோவின் மரணம்காரணமாக காலியாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கருணை உள்ளம் கொடுக்கும் கரங்கள், அன்பான பேச்சு, சமதிருஷ்டி இவற்றைப் பயிலுக. நீங்கள்சீக்கிரம் தெய்வஅனுபூதியைப்பெறலாம்.

—சுவாமி சிவானந்தர்

# ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELANADU Jaffna: Phone: 339

[illegible]ம் விசுவாவசு ஆண்டு பங்குனி ௴ 3 உ (16-3-66)

## உல்லாசப் பிரயாணம்

உல்லாசப் பிரயாணிகளைக் கவருவதன் மூலம் நாட்டின்வருமானத்தைப் பெருக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதற்கான மசோதா ஒன்றும் சமீபத்தில் ஜனப் பிரதிநிதிகள் சபையில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. இது வரவேற்கவேண்டியநல்ல முயற்சி.

அபிவிருத்தியடைந்த மேலைநாடுகளைவிட சமீபத்தில் விடுதலையடைந்த ஆசியநாடுகள்பலவும் உல்லாசப்பிரயாணிகளைக் கவருவதற்கான பலதிட்டங்களை வகுத்து அதன் மூலம் தேசிய வருமானத்தைப் பெருக்கியுள்ளன. தங்கள் நாட்டின் இயற்கைச் செழிப்புகளைப் பற்றி வெளிநாடுகளில் பெருந்தொகைச் செலவில் பிரசாரமும் செய்கின்றனர்.

நமது நாட்டிலும் உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ச்சிசெய்வதற்கு இதுவரை பலவிதமுயற்சிகள் எடுக்கப்பட்டு வந்திருப்பினும் போதியவெற்றிகிட்டவில்லை. உல்லாசப்பிரயாணிகள் தங்குவதற்கோ நல்ல உணவு பெறுவதற்கோ இங்குள்ள வாடிவீடுகள் சிறந்த முறையில் இயங்கவில்லை. இங்கு வந்து திரும்பிய உல்லாசப்பிரயாணிகளே இது பற்றிக் குறைகூறியிருக்கின்றனர்.

இலங்கையின் பல பகுதிகளில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பண்டைக்கலை, கலாசாரங்களின் நினைவுச் சின்னங்களும் இயற்கை அழகு நிரம்பிய பகுதிகளும் உல்லாசப்பிரயாணிகளைக் கவரக்கூடியதாக விளங்குகின்றன என்பது உண்மையே. ஆயினும்இடிந்த கோபுரங்களும், சிதைந்த கட்டிடங்களும் மட்டும் உல்லாசப் பிரயாணிகளுக்குத் திருப்தியளித்துவிடமாட்டா. வடக்கு,கிழக்கு மாகாணங்களிலும் உல்லாசப்பிரயாணிகளைக் கவரக்கூடிய இடங்களிருக்கின்றன. ஆனால் இவற்றை கவர்ச்சியாக்கவும், இவைபற்றி வெளிநாட்டவர்க்குத் தெரியப்படுத்தவும் இதுவரை ஆட்சிப் பீடத்திலிருந்த அரசாங்கங்கள் தவறிவிட்டன. இதற்கு அரசியல் காரணங்களன்றிவேறுஎதுவும் கிடையாது. வடக்கில் கீரிமலையும் கிழக்கில் கன்னியாய் வெந்நீரூற்றுக் கிணறுகளும் பிரசித்தமானவை. இவ்விரண்டும் வேறு நாட்டிலிருந்தால் இவைபற்றி உலகம் முழுவதுமே இதுவரை அறிந்திருக்கும். இவைகளையும் சீரமைத்து உல்லாசப் பிரயாணிகளின் கவனத்தை இந்தப்பக்கமும் திருப்பினால், ராஜாங்க மந்திரி உல்லாசப்பிரயாணிகள்மூலம் எதிர்பார்க்கும் வருமானம் அதிகரிக்கும். முதலில் நமது பிரதிநிதிகள் இவைபற்றிராஜாங்க மந்திரியின் கவனத்துக்குக் கொண்டுவருதல் நலம்.

## பஞ்சாபில் 'திருவாழத்தான் கதை'

''திருவாழத்தான் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்'' என்பது தமிழ்நாட்டில் வழங்கும் ஒரு பழமொழி. பஞ்சாபில் நடைபெறும் சம்பவங்கள் இதை நினைவூட்டுகிறது. சீக்கியர்களின் பஞ்சாபிமொழி பேசும் தனி ராஜ்யக் கோரிக்கைக்கு இந்திய அரசாங்கம் இதுவரை இணங்க மறுத்தபோதும் அங்கு கிளர்ச்சியும் கலகமும் அடிக்கடி நிகழ்ந்தன. இது பெரிதாகி நாட்டின் தேசிய ஒற்றுமையே குலைந்துவிடாமல் காப்பாற்றும் பொருட்டு பஞ்சாபி சுபாக் கோரிக்கைக்கு இணங்கிய பின்னரும்கூட அங்கு கிளர்ச்சியும் கலகமும் தோன்றியிருப்பது 'திருவாழத்தான்' கதைதான்.

பஞ்சாயில் தோன்றியுள்ளபலாத்காரச் சம்பவங்களும் கலகங்களும் உறுதியுடன் அடக்கப்படவேண்டியவை. இதில் இந்திய அரசியல் தலைவர்களுக்கிடையில் கருத்துவேற்றுமை இருப்பதற்கு இடமிருக்க முடியாது. சகல பிரச்னைகளுக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முடியுமென்பதை உலகுக்கு வலியுறுத்திவரும் இந்தியாவில் உணவுப் பிரச்னைக்கும் மொழி, மத, இனப் பிரச்னைக்கும் பலாத்காரச் செயல்கள் மூலம் தீர்வுகாண முற்படுவதை, இந்திய மக்கள் எப்படித்தான் ஏற்றுக்கொள்ள முடியும்?

பஞ்சாபி சுபாக் கோரிக்கை விஷயத்தில் ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சியின் மேலிடம் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டது. அது தவறானால் அதைப்பற்றி ஆட்சேபனை தெரிவிப்பதற்கு ஜனநாயக வழிகள் பலவுண்டு. இதை விடுத்து வேறுவழிகளில், அதுவும் அரசியலைக் கருத்தில்கொண்டு நாட்டில் சீர்குலைவு ஏற்படுத்த முயல்வோர்மீது இந்திய அரசாங்கம் தயவுதாட்சண்யம் காட்டுவதற்கிடமில்லை.

### இந்திராவுக்கு பிரி. பிரதமர் அழைப்பு

புதுடில்லி, மார்ச். 15

இந்தியப் பிரதமர் இம்மாத இறுதியில் அமெரிக்கா சென்று திரும்பும்போது பிரிட்டனுக்கும் விஜயம் செய்யவேண்டுமென பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. வில்சன் விருப்பம் தெரிவித்துள்ளார். திரு. வில்சன் திருமதி இந்திராகாந்திக்கு தனிப்பட்டமுறையில் அனுப்பியுள்ள ஒரு செய்தியில் அவரை பிரிட்டனுக்கும் வந்துபோகும்படி அழைப்புவிடுத்திருப்பதாகக் கருதப்படுகின்றது.

திருமதி இந்திராகாந்தி இம்மாதஇறுதியில்வாஷிங்டனுக்குப்போய்அங்கு நான்கு நாட்கள் மட்டுமே இருப்பார் என்று அறியப்படுகின்றது.

## மனோன்மணி ஆலய திருப்பணி வேலைகள் கும்பாபிஷேகம்

கோண்டாவில், செவ்.

கொக்குவில் கிழக்கு நந்தாவில் கற்புலத்து ஸ்ரீமனோன்மணி அம்மன் ஆலய கும்பாபிஷேக வைபவத்தை முன்னிட்டு கொக்குவில் கோண்டாவில் இந்து இளைஞர் சங்க ஆதரவில் தேர்த் திருப்பணிக்கென நடைபெற்ற பகுத்தறிவுப் போட்டியில் 1-வதுபரிசைப்பெற்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வன் சந்திரா சிறீபதி தங்கப்பதக்கத்தை தேர்த் திருப்பணிக்கு அர்ப்பணித்து அதன் பெறுமதியை தேர்த் திருப்பணிச் சபையிடம் கொடுத்தார். 2-ம் பரிசு கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த செல்வி சுமதி கனகராசாவுக்கும், 3-ம் பரிசு கொக்குவிலைச் சேர்ந்த செல்வன் தியாகராசாவுக்கும் கிடைத்தன.

மேற்படி வைபவத்தில் வண்ணை சி. எஸ். எஸ். மணிபாகவதருக்கு ஆலய பரிபாலனசபையின் தலைவர் திரு. சி. அருளம்பலம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். கும்பாபிஷேக வைபவத்தையொட்டி தொடர்ந்து 45 தினங்கள் கதாகாலட்சேபம் செய்த ஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபாகவதருக்கு கொக்குவில், கோண்டாவில் இந்து இளைஞர் சங்கம் ''அருள் மொழி அரசு'' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்கள் பட்டமளிப்பு விழாவில் வித்துவான் திரு. க. கி. நடராஜன் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

வல்வெட்டித்துறை, செவ்.

வல்வை முத்துமாரி அம்மன் கோவிலில் இம்மாதக் கடைசியில் வாலஸ்தாபனம் செய்து திருப்பணி வேலைகளை விரைவில் முடிப்பதற்கு முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. ஆலய முகப்பு மண்டபத் திருப்பணி வேலைகளும் இராஜ கோபுர திருப்பணி வேலைகளும் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. ஆனி மாதத்திலோ ஆவணிமாதத்திலோ கும்பாபிஷேகம் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### கைத்தொழில் மந்திரி வெளிநாடு புறப்பட்டார்

பம்பலப்பிட்டி, செவ்.

கைத்தொழில் மீன்பிடி இலாகா மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் மேற்கொள்வதற்காக கடந்த இரவு விமானமார்க்கமாகப் புறப்பட்டுச்சென்றார்.

இலங்கையின் கைத்தொழில் திட்டங்களுக்கு வெளிநாட்டு மூலதனம் தேடும் நோக்கத்துடனேயே அவர் வெளிநாடு புறப்பட்டுச் சென்றுள்ளார் என்று தெரிகின்றது. திரு. குணவர்த்தனவுடன்,கைத்தொழில்மீன்பிடி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எஸ். ஜே. வல்பிட்டி, மேற்படி அமைச்சைச்சேர்ந்த உதவி டைரக்டர் திரு. ஆர். எம். செனவிரத்ன, மந்திரியின் அந்தரங்க காரியதரிசி திரு. ஏ. என். பெரேரா ஆகியவர்களும் சென்றுள்ளனர்.

## நாட்டிலும் நகரிலும்

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள பள்ளிக்கூடம் ஒன்றில் மாணவர்களின் மதிய போஜனத்துக்காகக் கொடுக்கப்படும் பணிஸில் வண்டுகளும் புழுக்களும் காணப்பட்டனவாம். இதை பார்த்த பள்ளிக்கூட அதிபரும்அப்பகுதியிலுள்ள வைத்திய அதிகாரியும் யாழ்ப்பாணத்திலுள்ள கல்விப் பகுதி உதவி அதிபருக்கு முறையிட்டனர். இவர் உடனே அப்பள்ளிக்கூடத்திற்குப் பணிஸ் கொடுக்கும் பேக்கரிக்காரருக்குக் கடிதம் ஒன்றை எழுதி சுத்தமான பணிஸ் கொடுக்காவிட்டால் அவருடை கொந்தருத்து உடனடியாக ரத்துச்செய்யப்படுமென்று கடுமையாக எச்சரிக்கைசெய்திருக்கிறார்.

இந்தக் கொந்தருத்துக்காரர் போன வருடமும் ஒரு தடவை எச்சரிக்கைசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிய வருகிறது. மீண்டும் மீண்டும் எச்சரித்துக்கொண்டிருப்பதைவிட, ஒருமுறை தவறு செய்தவர்கள் என்று கண்டால், உடனே அவருக்குச் சீட்டுக்கொடுத்து விடவேண்டியதுதானே? கிளிநொச்சியில் வேறு பேக்கரிகள் இல்லாமலும் இருக்கக்கூடும். அப்படியானால் வெறெங்கிருந்தாவது சுத்தமான முறையில் தயாரிக்கப்பட்ட பணிஸை மாணவர்களுக்குக் கொடுப்பதற்கு ஒழுங்குசெய்யவேண்டியது கல்விப் பகுதியின் கடமை.

மாணவர்களுக்கு வயிற்றிலடிக்கும் இந்த அநீதி மேற்படி பள்ளிக்கூடத்தில் மட்டும் நிகழ்வதல்ல. வேறு பல பள்ளிக்கூடங்களிலும் மதிய உணவுக்கென்று கொடுக்கப்படும் பணிஸை பையன்கள் உதைபந்தாக உபயோகிப்பதை நான் பார்த்திருக்கிறேன். 'பணிஸ்' [illegible] கல்வி மந்திரியாக இருந்தபோது பாடசாலை மாணவர்களின் நன்மைக்காக அவர் கொண்டுவந்த இந்தப் பணிஸ் கொடுக்கும் வழக்கத்தை பேக்கரிகாரர்களும் கொந்தருத்துக்காரர்களும் துஷ்பிரயோகம் செய்வது மிகவும் வருந்தத்தக்கது.

இந்த விஷயத்தில் கைக்கூலிப்பேச்சும்நிறைய அடிபடுகிறது அதிகாரத்திலுள்ளவர்கள் தங்களுக்குவேண்டியவர்களுக்குக் கொந்தருத்து அளிப்பதும், வேண்டாதவர்களானால் அவர்கள் மீது பழிச்சொல் கூறுவதும் சில இடங்களில் நடந்துவருகிறது.

என்னத்தைச்செய்தாலும் சிறு குழந்தைகளின் வயிற்றில் அடிப்பதை சிசுஹத்திக்கு இரண்டாவதாகக் கூறலாம். ஆகையால் இந்த விஷயத்தில் கல்விப்பகுதியும் சுகாதாரப் பகுதியும் ஒருமித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஃ ஃ ஃ

நமது மந்திரிகளில் திரிகரண சுத்தியோடும், திறமையோடும் உண்மையில் நாட்டின் நலனுக்காக பாடுபடுபவர்கள் யார் என்று கேட்டால், அவருடைய கொள்கைகள் எதுவாயிருந்தபோதிலும், பிலிப் குணவர்த்தனவின் பெயரே முதலில் ஞாபகத்துக்கு வருகிறது. முற்காலத்தில் தீக்கக்கும் புரட்சிவாதியாயிருந்தவர் வயது போகப்போக வெறும்கனவுகளை மறந்துவிட்டு, நாட்டுக்கு உருப்படியாக ஏதாவது செய்யவேண்டுமென்ற பழுத்த தேசப்பற்றில் ஊறிவிட்டார். இல்லாவிட்டால்பண்டாரநாயகாவுடன் சேர்ந்து அரசாங்கம் நடத்தியவர், இப்பொழுது டட்லியின் தேசிய அரசாங்கத்திலும் சேர்ந்திருப்பாரா? கிழக்கைரோப்பியநாடுகளுக்கு விஜயம் செய்யும் பிலிப் வெறும் உல்லாசப்பிரயாணம் செய்வதோடு நின்றுவிடமாட்டார் என்றநம்பிக்கையுடன் அவருக்கு 'சுகமாய்ப் போய் வாருங்கள்' என்று ஆசி கூற விரும்புகிறேன்.

— வழிப்போக்கன்

## ஐயாறன் எழுதுவது

எங்கே இவ்வளவு நாட்களாகக் காணோம்! என்று அன்பர்கள் பலர் கேட்கிறார்கள்.

இந்தியா சென்றிருந்தேன், என் வயோதிக அன்னையாரைப் பார்க்க. அன்னைக்கு உடல் நலம் சரியில்லை என்று அத்தாட்சிக் கடிதம் அல்லது தந்தி காட்டி அந்தப்பக்கம் எட்டிப்பார்க்க பகீரத முயற்சியுடன் இரண்டொரு முறை அனுமதி பெற்றேன். இல்லாவிட்டால் ஜன்மத்துக்கு ஒரு முறைக்கு மேல் இலங்கையர்கள் இந்தியாப் பக்கமும் செல்ல முடியுமா? டயஸ் தர்பாரில் போட்டிருந்த அந்த அநியாய உத்தரவை நல்ல வேளையாக இப்போது தேசிய அரசாங்கத்தார் நீக்கி விட்டார்கள் அவர்கள் வாழ்க!

என்றாலும் கையில் காசு கொண்டு செல்ல அனுமதி அளிக்கவில்லை. போய்வர விமான டிக்கெட் மட்டும் வாங்கிச் செல்ல அனுமதி தந்தனர். திருச்சியிலே இறங்கியதும், வண்டிச் செலவு, சாப்பாடு இதற்கு என்ன செய்வது? இந்தியா ரூபாய் பத்துவரை எடுத்துச் செல்லலாமென்று ஓர் அன்பர் கூறினர். இந்தியாப் பணம் இங்கு கிடைப்பது குதிரைக் கொம்பு. விசாரித்ததில், ஓர் அன்பர் இந்திய பத்து ரூபாய்த் தாள் கைமாற்றாகத் தந்தார். அந்தப் பண பலத்துடன் பலாலியிலே விமானமேறினேன்! பிரயாணம் செய்து ஒருவருஷமாயிருந்தால், ஐம்பது ரூபாய்வரை கொண்டு செல்ல அனுமதிப்பதாகக் கேள்விப்பட்டேன். எல்லாம் அந்த ''எக்ஸ்சேஞ்'' அதிகாரியின் இஷ்டத்தைப் பொறுத்ததாம்.

ஃ ஃ ஃ

அந்தப் பத்து ரூபாயையும் விடமாட்டார்களென்றும், புதிய கஸ்டம்ஸ் அதிகாரி மிகக் கண்டிப்பானவரென்றும் ''விஷயமறிந்த'' ஓர் அன்பர் பயமுறுத்தினார். நெஞ்சு படபடக்க, கஸ்டம்ஸ் அதிகாரியிடம் அந்தப் பத்தையும் 'டிக்ளேர்' செய்து என்ன உத்தரவாகுமோ என்று ஏங்கி நின்றேன். ''சரி'' என்று அனுமதித்து விட்டார்! அப்பாட! பெருமூச்சு விட்டேன்.

வட்டுக்கோட்டையிலிருந்து ஒரு வயோதிப தம்பதிகள் வைத்தியச் சிகிச்சைக்காக விசேஷ பர்மிட் பெற்று இரண்டாம் முறையாக வேலூருக்குச் சென்றார்கள் அங்கு தங்கள் சொந்த பாவனைக்காக, பெரிய 'ஹார்லிக்ஸ்' பார்டில் கொண்டு வந்ததை, கஸ்டம்ஸ் அதிகாரிகள் அனுமதிக்க மறுத்துவிட்டனர். எவ்வளவோ மன்றாடியும் பயனில்லை. அந்த வயோதிபர்களின் மனம் அனேகமாக உடைந்தது. பாவம்!

ஓர் இந்தியர் ஒரே அடியாக தாயகம் திரும்புகிறாராம். இரு குடைகளைக் கொண்டு சென்றார். ஒன்றை வைத்துவிட்டு மற்றொன்றைக் கொண்டு செல்லுமாறு உத்தரவு பிறந்தது. ''ஐயா! கடைசியாகச் செல்லுகிறேன், இரண்டையும் தயவுசெய்து அனுமதியுங்கள்'' என்று மன்றாடிக் கேட்டார். ''அப்படியா, இரண்டையும் வைத்துவிட்டுப் போ ஒன்றுகூட எடுத்துச் செல்லப்படாது'' என்று ஓடர் பிறந்து விட்டது. என்ன செய்வார் அவர்! யாரிடம் முறையிடுவது? இப்படி நடக்குமென்று தெரிந்திருந்தால் அவர் வாய் திறந்திருப்பாரா? (5-ம்பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாபிலும் டில்லியிலும் கலவரம்

## உள்துறை அமைச்சருடன் பிரதமர் ஆலோசனை

### பஞ்சாபிசுபா பிரச்னை

புதுடில்லி, மார்ச் 15

இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி, பஞ்சாப் ராஜ்யத்திலும், டில்லியிலும் எழுந்துள்ள தற்போதைய சூழ்நிலை குறித்து உள்துறை அமைச்சர் திரு. குல்சாரிலால் நந்தாவுடன் நேற்று ஆலோசனைகள் நடத்தினர்.

ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்ற பிரதேசங்களை நேரில் பார்வையிடச் சென்றிருந்த உள்துறை அமைச்சர் திரு. நந்தா நேற்றுக் கல்கத்தாவிலிருந்து திரும்பியதும் பிரதம மந்திரியைப்போய்ச் சந்தித்துப் பேசினர். அவருடன் உணவு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியமும் சென்றிருந்தார்.

பஞ்சாப் ராஜ்ய அமைப்பு சம்பந்தமாக மீண்டும் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின்போதுசுமார் 6 பேர் கொல்லப்பட்டதாகவும் நூற்றுக்கும் மேலானோர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது. பஞ்சாப்பில் ஜலந்தர் நகரிலும், ஜவானியிலும் நடைபெற்ற கலவரங்களின் போது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய நேர்ந்தது. ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசாங்க உடைமைகளுக்குதீயிட்டதோடு கட்டிடங்களையும் நொறுக்கமுற்பட்டதாக அறியப்படுகின்றது.

**நந்தாவின் வேண்டுகோள்**

உள்துறை அமைச்சர் திரு. குல்சாரிலால் நந்தா பிரதம மந்திரியைச்சந்தித்த பிறகு பத்திரிகை நிருபர்களுடன் பேசியபோது, நாட்டில் எழுந்துள்ள இக்கட்டான இந்த நிலைமைகுறித்து தாம் பெரிதும்கவலைகொண்டிருப்பதாகத் தெரிவித்தார். இந்தச்சம்பவங்கள்சம்பந்தப்பட்ட எல்லா சமூகத்தவர்களுக்கும் கவலையளிப்பதாகும். வீண்கலவரங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டுமக்களின்உடைமைகளை நாசம் செய்வதை விடுத்து அமைதியையும் சௌஜன்யத்தையும் நிலைநாட்ட எல்லாக்கட்சியினரும் முன்வரவேண்டுமென்று நந்தா தெரிவித்தார்.

**பிரதமர் திருப்தி**

பஞ்சாப் பிரதேசத்தில் துண்டிக்கப்பட்ட தந்தித் தொடர்புகள் யாவும் இப்பொழுது பழையபடி தொழிலபட ஆரம்பித்துள்ளன. ஜலந்தர் நகர்ப்பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டக் கலவரங்களைத் தொடர்ந்து அப்பிரதேசத்தில் மீண்டும் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஊரடங்கு சட்டம் அமுலாக்கப்பட்டுள்ள பிரதேசங்களை பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி சென்று பார்வையிட்டார். ஊரடங்குச்சட்டம் உறுதியாகஅமுல் நடத்தப்பட்டுவருவது பற்றி அவர் திருப்தி தெரிவித்திருக்கிறார்.

**ஜனசங் கருத்து**

டில்லி பிரதேச ஜனசங் தலைவர் பிரஸ்த பக்கலவரங்கள் சம்பந்தமாகக்கருத்துத்தெரிவிக்கையில் குழப்பம் விளைவிப்பவர்களைக் கண்டித்தார் முதலில் சமூகங்களுக்கிடையில் பூரண அமைதிநிலவவேண்டுமென்று அவர் சொன்னர்.

பஞ்சாபிலும் டில்லியிலும் நடைபெற்றகலவரசம்பவங்கள் சம்பந்தமாக பாகிஸ்தான்ரேடியோ இன்று ஒலிபரப்புச் செய்தியில், டில்லியிலும் பஞ்சாப்பிலும் இடம்பெற்ற கலவரங்களில் ஆறு பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் நூறுக்கு மேலானோர் காயமடைந்திருப்பதாகவும் இருநூறுக்கு மேலானோர் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் அறிவித்தது.

**மாஸடர் தாராசிங்**

பஞ்சாப் ராஜ்ய கிளர்ச்சி சம்பந்தமாக இதுவரை கைதுசெய்யப்பட்டிருப்பவர்களின் அகாலிதள தலைவர் மாஸ்டர் தாராசிங் முக்கியமானவர். மேலும் அனேகர் கைது செய்யப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

மேற்கு வங்க முதன் மந்திரி திரு. பி. சி. சென், ராஜ்யத்தில்மீண்டும் மாமூல் நிலைமையை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகவும், அதன் அடிப்படையில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டுள்ள எதிக்கட்சித் தலைவர்கள் பலர் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

## பஞ்சாபில் நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளது

புதுடில்லி, மார்ச் 15

பஞ்சாபின் நிலைமை மிகவும் கஷ்டமாக இருப்பதாயும், ஆனல் நிலைமை கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாயும் உள்நாட்டு ராஜாங்க மந்திரி திரு. ஜயசுக்லால் ஹாத்தி லோகசபையில் அறிவித்தார்.

தலைநகர் சண்டிகாருக்கு விஜயம் செய்த திரு. ஹாத்தி மேலும் பேசுகையில், ராஜ்ய அரசாங்கம் நிலைமையை உறுதியாகவும், திறமையாகவும் கையாள்வதாகவும் தெரிவித்தார்.

பஞ்சாபில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவது ராஜ்ய அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் அவர்கூறினர்.

## "அண்டை நாடுகளுடன் சமாதானமாக வாழ்வோம்"

### பாக் கொள்கைபற்றி ஜெனரல் ஆயூப்கான்

கராச்சி, மார்ச் 15

அண்டை நாடுகளுடன் சமாதானத்தோடு வாழ்வது தான் பாகிஸ்தான் அரசாங்கத்தின் கொள்கை என்று ஜெனரல் அயூப்கான் அறிவித்திருக்கின்றார்.

சிட்டகாங் நகரில் ஜெனரல் அயூப்கானுக்கு வரவேற்பு ஒன்று அளிக்கப்பட்டது. துல்காசாரா என்ற இடத்தில் ஜனசமூகநிலையம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்து ஜெனரல் அயூப்கான் பேசினர்.

பாகிஸ்தானின் வெளிநாட்டுக்கொள்கையை விளக்கிப்பேசுகையில் அவர் பின்வருமாறுதெரிவித்தார்:

அண்டை நாடுகளுடனும் இதர உலகநாடுகளுடனும் பாகிஸ்தான் சமாதானமாகவே வாழவிரும்புகின்றது. இந்த அடிப்படையில் இந்தியாவுக்கு பாகிஸ்தான் எத்தனையோ தடவைகள் நேசக்கரம் நீட்டியிருக்கின்றது.

உலக முஸ்லிம் நாடுகளுடன் நேரடி உறவைப் பலப்படுத்திக்கொள்ள பாகிஸ்தான் விரும்புகின்றது. சீனு போன்ற நாடுகளுடன் உறவு நெருக்கமாக இருந்துவருகின்றது.

நாட்டைப் பலப்படுத்தவும் சுபிட்சமாக்கவும் இயன்ற முயற்சிகளையெல்லாம் மேற்கொள்ளும்படி ஜெனரல் அயூப்கான் [illegible] வைபவத்தின்போது கேட்டுக் கொள்ளப்பட்டார்.

## சீனஊடுருவல்

### இந்தியாவின் ஆட்சேபம்

புதுடில்லி, மார்ச் 15

இந்திய எல்லைப்பிரதேசங்களில் சீனர்கள் செய்து வந்ததாகக் கூறப்படும் ஊடுருவல்கள் பற்றி இந்திய அரசாங்கம் சீன அரசாங்கத்துக்கு ஆட்சேபக்குறிப்பு ஒன்றை அனுப்புவைத்துள்ளது.

இந்த ஊடுருவல்களின் காரணமாக இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளநஷ்டங்களுக்கு நஷ்டஈடு கோரும் உரிமை இந்திய சர்க்காருக்கு உண்டு என்று அக்குறிப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சீன எல்லையில் இந்திய ராணுவம் ஊடுருவல்களில் ஈடுபட்டதாக சீன அரசாங்கம் சமீபத்தில் குற்றம் சாட்டி அனுப்பியிருந்த ஒரு குறிப்புக்குப் பதில் அளிக்கு முகமாகவே இந்திய அர[illegible] ளது.

# இந்திய ராணுவத்தின் கடும் தாக்குதல்

## மீஸோக்கள் ஓடுகின்றனர்!

புதுடில்லி, மார்ச் 15

மீஸோக்களை எதிர்த்து இந்திய ராணுவத்தினர் நடத்திவரும் போரில் மீஸோக்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டதாகவும், ராணுவத்தின் தாக்குதலை எதிர்க்க முடியாமல் அவர்கள் புறங்காட்டிஓட ஆரம்பித்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

மீஸோக்கள் கைவசம் இருந்த பிரதேசங்களை இந்திய ராணுவம் கைப்பற்றி வருகின்றது. இதனுல் மீஸோக்கள் பின்வாங்கிச் செல்லவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

பர்மாவுக்கும் இந்தியாவுக்குமிடையிலுள்ளஎல்லைப் பிரதேசத்தில் இந்திய மீஸோக்களின் நடமாட்டம் இருக்குமாகில் அரசாங்கத்துக்கு அறிவிக்கவேண்டுமென்று பர்மா அரசாங்கம் எல்லைப்பிரதேசத்திலுள்ள தனது கிராம வாசிகளைக் கேட்டிருக்கின்றது.

# இந்தோனேஷிய புதிய மந்திரிசபை

## சுகர்ணேவுடன் சுகர்டோ ஆலோசனை

ஜாகர்த்தா, மார்ச் 15

இந்தோனேஷியாவில் புதிதாக மந்திரிசபையொன்றை நிறுவுவது சம்பந்தமாக ஜெனரல் சுகர்டோ நேற்று பழைய ஜனதிபதி திரு. சுகர்ணேவுடன் மந்திராலோசனை நடத்தியதாக அறிவிக்கப்பட்டது.

புதிதாக அமைக்கப்படவிருக்கும் இந்தோனேஷிய மந்திரிசபையில் கம்யூனிஸ்ட் சார்பற்றவர்ளே பதவிவகிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இராணுவப் பாதுகாப்பில் இருந்துவரும் பழைய வெளிநாட்டு அமைச்சர் திரு. சுபந்திரியோ இப்போது சுகர்ணேமாளிகையில் இருந்து வருகின்ருர் ஆர்ப்பாட்டங்கள் மூலம் இந்தோனேஷிய மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தவர்களில் திரு. சுபந்திரியோ முக்கியமானவர்.

# அண்ணுமலை பல்கலைக்கழகத்தின் நல்ல முன்மாதிரி

## "கடிதக்கனிகள்' வெளியீட்டு விழாவில் ஆசிரியர் ஹரன் பாராட்டு

அண்ணுமலைநகர், மார்ச்15

அண்ணுமலைப் பல்கலைக்கழக நூலகத்தில், நூலகர் திரு. டீ. கோபாலகிருட்டினராவ் தலைமையில் திரு. தமிழ் ஊழியனுல் தொகுக்கப்பட்ட 'கடிதக் கனிகள்' என்னும் நூல் அண்மையில் வெளியிடப்பட்டது. டாக்டர் மு. வரதராசனுரின் அணிந்துரையைத் தாங்கிவரும் இந்நூலின் முதற்படியை இலங்கைநாளிதழான 'ஈழநாடு' தலைமை ஆசிரியர் திரு. ஹரன் வெளியிட்டார். தமிழ்க் கீழைக் கலைத்துறையில் பாரதியார் பாடலில் ஆராய்ச்சி செய்யும் பாரதியாரின் பேர்த்தி விஜயபாரதி முதற்படியை வாங்கிக் கொண்டார். தமிழ்விரிவுரையாளர்களான திரு சு. சண்முகமும், திரு. வைத்தியலிங்கமும் 'கடிதக்கனிகள்' பற்றி ஆய்வுரை நிகழ்த்தினர்கள் 'கவிதைக்கனிகள், கட்டுரைக்கனிகள்' போன்ற நூல்களை முன்பு தொகுத்து வெளியிட்ட திரு. தமிழ்ஊழியனின் தமிழ்த் தொண்டை பலரும் பாராட்டிப்பேசினர்.

அவருடைய புதுவெளியீடான கடிதக்கனிகளில் இலங்கை மாணவர்களான திருவாளர்கள். சி. சத்தியமூர்த்தி(திருக்கோணமலை), ஈழத்துச் சிவானந்தன் (புங்குடுதீவு), அ.வெ அரியநாயகம் (நெடுந்தீவு), சு. சா. நடராசா (காரைநகர்) போன்றவர்கள் சிறிப்பிடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**நல்லமுன்மாதிரி**

நூலை வெளியிட்டு ஆசிரியர் ஹரன் பேசுகையில், அண்ணுமலை மாணவர்களின் இந்த அரிய முயற்சியைப் பாராட்டி, இது மற்ற சர்வகலாசாலைகளுக்கு நல்லமுன் மாதிரியென்றும், இளம் எழுத்தாளருக்கு உற்சாகமும் ஆதரவும்சந்தர்ப்பமும் அளித்துள்ளது தமிழ் வளர பெரிதும் உதவுமென்றும் எழுத்தாளருக்கு அதுவும் இளம் எழுத்தாளருக்கு உற்சாகம் அளிக்கவேண்டியது மிகவும் அவசியமென்றும் கூறி, கடிதமுறை இலக்கியம்ஐரோப்பியமொழிகளில் வளர்ந்துள்ளதாயும். கடிதத்தில் ஒருவர் தன்மனே உணர்ச்சிகளையும் அனுபவங்களையும் தடையின்றி வெளியிடலாமென்றும், கவிதை, கட்டுரை இலக்கியத்தைவிட கடித இலக்கியம் படிக்க அதிகருசியாக இருக்குமென்றும் சொன்ஞர்.

சிறப்பாக இலங்கை மாணவர் பலருக்கு அண்ணுமலை சர்வகலாசாலை இடமளித்து விசேஷ சலுகையும் காட்டி வருவதற்காக இலங்கையின் சார்பாக நன்றி தெரிவித்து, இருநாடுகளுக்கும் இம்மாணவர்கள் உயிர்ப்பாலமாக இருந்து, ஈழத்துக்குப் பெருமை தரும் முறையில் இங்கு தொண்டாற்றுவது மிக மகிழ்ச்சியளிப்பதாகவும் குறிப்பிட்டார்.

தேநீர்விருந்துடன், தொடங்கிய விழா, நூலகமன்றச் செயலாளர் செல்வி என். இலக்குமி நன்றி நவிலலோடு இனிது நிறைவெய்தியது.

## இந்தியாவில் பாக். விமானப்படைத் தலைவர்

புதுடில்லி, மார்ச் 15

பாகிஸ்தான் விமானப் படைத் தலைவர் திரு. நூர்கான் இந்தியா வந்துசேர்ந்துள்ளார்.

காலஞ்சென்ற பிரதமர் சாஸ்திரியும் ஜெனரல் அயுப்கானும் செய்துகொண்ட டாஷ்கண்ட் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர் இந்திய விமானப்படை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தக்கூடும் என்று நம்பப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் பரபரப்பு

# மர்ம மங்கையின் நடமாட்டம்
## இளங்காளையர்களின் இரத்தத்தைக் குடிக்கிறதாம் !

வெள்ளவத்தை, திங்

கொழும்பில் இளம் காளையர்களின் இரத்தத்தைக் குடித்து அவர்களைப் பலிகொள்வதாகக் கூறப்படும் மர்ம மங்கையின் பயங்கரச் செயல்குறித்துப் பொலிசார் புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரையில் 18 வயதுக்கும் 35 வயதுக்குமிடைப்பட்ட நான்கு ஆண்களை இம்மங்கை பலிகொண்டுள்ளாராம்.

கடந்த சனிக்கிழமை மாலை 4-30 மணிக்குக் கொழும்பு றீகல் படமாளிகைக்குள் தனது மூன்றுமாத மனைவியுடன் படம்பார்க்கச் சென்ற பறங்கியர் ஒருவர் இவ்வாறு பலிகொள்ளப்பட்டோரில் இறுதியானவரென்ற செய்திகள் கிடைத்துள்ளன. தனது சொந்தக் காரில் மனைவியுடன் இவர் படம் பார்க்க வந்தபோது டிக்கெட் வாங்கி வரும்படி மனைவியை அனுப்பிவிட்டு அவர் காரிலேயே அமர்ந்திருந்தாராம். இதற்குள் மர்ம மங்கை அவரின் இரத்தத்தை உறிஞ்சிக்குடித்ததால் உடை முழுதும் இரத்தம் பரவிய மயங்கிய நிலையில் அவர் இருந்தாராம்.

இதைப் பயன்படுத்தி அவரிடமிருந்து பணத்தையும், 'செக்'கையும் திருடர்கள் பறித்துக்கொண்ட போது அவர்கள் பிடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

டிக்கெட் பெற்றுக்கொண்டு திரும்பிவந்த இளம் மனைவி இரத்தத்தில் தோய்ந்துள்ள கணவனைக் கண்டு அதிர்ச்சி அடைந்தாகவும்சிறிதுநேரத்திற்குள் அந்தப் பறங்கியர் மரணமடைந்தாரெனவும் அறியப்படுகின்றது.

இதற்குச் சிலதினங்களுக்கு முன் கொம்பனித் தெருவில் ஒரு வர்த்தகர் மர்மமங்கைப் பிசாசினால் பலிகொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இவ்வாறு நடைபெற்றுவரும் மர்மமங்கையின் பொதுவான நடவடிக்கைகளைப் பற்றிப் பின்வரும் தகவல்கள் கிடைத்துள்ளன.

மாலை 4 மணிக்கும் 7 மணிக்குமிடையே தான் மர்மமங்கை தனது திருவிளையாடல்களைச் செய்கிறாளாம். டாக்சியில் அன்றேல் கார்களிலேயே பெரும்பாலும் இது நடைபெறுகின்றதாம். எவராவது இவ்வாறான வாகனத்தில் ஏறியதும் அவருக்கு அருகே அழகி ஒருத்தி திடீரென்று தோன்றுகிறாளாம்.

அவள் உடனே தன்னிடமுள்ள ஒரு கண்ணாடியை அவருக்குக் காட்டுகின்றாள். உடனே அந்த நபர் மயக்கமுற்றுவிடுவார். மயக்கநிலையிலேயே அவரின் ஆடை இரத்தமாக மாறுகின்றது. இப்படிப் பலவிதமாக மர்மமங்கையைப் பற்றிப் பேசப்படுகிறது.

பலிகொள்ளப்பட்டோரின் கழுத்தில் காணப்பட்ட பல் அடையாளங்களைக்கொண்டு மர்மமங்கை தனது பற்களால் அவரது இரத்தத்தை உறிஞ்சி எடுத்திருப்பதாக நம்பப்படுகின்றது.

ஒரு சந்தர்ப்பத்தில் மர்ம மங்கையினால் பலிகொள்ளப்பட்ட நிலையில் ஒருவர் டாக்ஸியில் தனது வீட்டிற்கு வந்தபோது அம்மங்கையை வீட்டு வாசலிலிருந்த அவரது மனைவி கண்டதாகவும் ஆனால் டாக்ஸி சாரதிக்கோ அம் மர்ம மங்கை தென்படவில்லையெனவும் ஒரு செய்தி கூறுகிறது. மர்ம மங்கையின் வலைக்குள் இளம் ஆண்களே அகப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. இறுதியாக சனிக்கிழமை நடைபெற்ற சந்தர்ப்பத்தில், காரில் மர்ம மங்கையின் கைரேகைகளைப் பொலிசார் பதிவுசெய்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

இந்தகுறிக்கப்பட்டநேரத்தில் காரிலோ, டாக்ஸியிலோ அன்றேல் கால்நடையாகவோ தனிமையில் மக்கள் செல்வது குறைந்துவருகிறது.

கொம்பனித்தெரு, கோட்டை, பொறல்ல போன்ற பகுதிகளில் மாலை நேரங்களில் மாம மங்கையின் நடவடிக்கையால் பெருத்த பரபரப்பு ஏற்பட்டுள்ளது மாய மோகினியைச் சுடுவதற்குச் சில பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

## இந்துவாலிபர் சங்க உத்தியோகஸ்தர்கள்

கைதடி, செவ்

கைதடி இந்துவாலிபர் சங்கத்தின் புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்கள் க. தம்பிப்பிள்ளை ஜே. பி., பி. சந்திரசேகரக் குருக்கள். தலைவர் ஆ. பொன்னையா. உப தலைவர்கள் மா. நகுலேஸ்வரன், சி. விசயரத்தினம், வ. சுப்பையா. இணைச்செயலாளர் பிரம்மஸ்ரீ குருசாமிஐயர், இ. நடராசா. பொதுச் செயலாளர் ஆ. கந்தையா. தனாதிகாரி இ. வேலாயுதர். சமயப்பிரசார அமைச்சர் சி. சரவணமுத்து.

செயற்குழுவினர் மு சந்திரசேகரம், க. சின்னத்தம்பி, ச. கமலநாதன், வே. பொன்னுத்துரை, க. சொர்ணலிங்கம், மு. துரையப்பா, சி. செல்லத்துரை, ப. பத்மராசன், வி. கனகரத்தினம்.

## கிராமத்துக்கு புதிய பெயர்

மட்டக்களப்பு, செவ்.

கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த நற்பிட்டி முனைக் கிராமம் தனது பெயரை 'சாந்திநகராக' மாற்றியுள்ளதாகத் தெரிகிறது. நற்பிட்டி முனைக் கிராம சபையின் தீவிர முயற்சியினால் இப்பெயர் மாற்றம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.


### கல்வி

மிகத்திறமையான விவேகமீட்டல் பாடங்கள் அளிக்கப்படுகின்றன. ஜி. ஏ. கியூ இலக்கிய வரலாறும் இலக்கணமும், பொருளாதாரத் தத்துவங்கள், ஆங்கில பொருளாதார வரலாறும் அரசியலும், இந்திய வரலாறு 1935 வரை. பிரதி ஒன்று ரூபா 18/-

இலக்கிய கலாசாலை,
...


# இராணுவத்தினர் மீது கடுமையான நடவடிக்கைகள்

கொழும்பு, செவ்.

இராணுவ அதிகாரிகள் அரசியல அல்லது மதஸ்தாபனங்களோடு எதிர்காலத்தில் ஏதாவது தொடர்பு வைத்தக்கொண்டால் அத்தொடர்புகள்பற்றி அரசாங்கத்திற்கு விபரமாகத் தகவல் தெரிவிக்கவேண்டும்.

வெளிநாட்டுத் தூதரகங்கள், அரசியல் கட்சிகள், மதஸ்தாபனங்கள் ஆகியவற்றிடமிருந்து இராணுவ முகாம்களுக்கு வரும் எல்லாவிதப் பிரசுரங்களும் முதலில் இராணுவ அதிகாரிகளால் படிக்கப்பட்டு அங்கிகரிக்கப்படவேண்டும் என்று தெரிகிறது.

இராணுவத்துக்குள் அரசியல் மதஸ்தாபனங்களின் நடவடிக்கைகள் தலைதூக்கியிருப்பதாகக்கருதப்படுவதின் காரணமகவே மேற்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த ஸ்தாபனம் பற்றிய எல்லாத் தகவல்களையும்தம்மிடம் சமர்ப்பிக்கும்படி தற்காலிக இராணுவத் தளபதி இராணுவத்தின் எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த தளகர்த்தாக்களையும் கேட்டிருக்கின்றார்.

கடந்த வாரம் பார்லிமெண்டில் தற்காலிகப் பிரமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பேசிய போது, ரஷ்யாவில் இருப்பதுபோல் இராணுவத்தை ஒரு அரசியல் முகாமாக்கும் நோக்கத்தோடு குறிப்பிட்ட சிலர் இராணுவத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.

### பலர் கைதாகலாம்

சமீபத்தில் தோல்வியுற்ற இராணுவப் புரட்சி சம்பந்தமாக இராணுவ அதிகாரிகள் பலரும் மற்ற பொதுப் பிரமுகர் பலரும் எந்தச்சமயத்திலும் கைதுசெய்யப்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது, காப்டன் எல் ஜி. சிகேரா கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து கோட்டைப் பொலிஸ்நிலையத்தில் விசேஷ பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தோல்வியடைந்த இராணுப் புரட்சிசம்பந்தமாக நடைபெற்ற நீண்ட புலன் விசாரணைகளின் பின் கைதுசெய்யப்பட்ட முதல் இராணுவ அதிகாரி காப்டன் சிகேராவாகும்.

# கல்லூரி வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டவர்
## எம். பி. பாராட்டு

சுழிபுரம், செவ்வாய்

''அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பின்னர் அதிகமான பாடசாலைகள், கல்லூரிகளில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே பூசல்கள் ஏற்பட்டு பலத்த குழப்பமும் சிக்கல்களும் தோன்றியிருக்கின்றன. ஆனால் இப்படியான சம்பவங்கள் எதுவும் நடைபெறாமல் கல்லூரி சுமுகமாக நடைபெறுவதாக இருந்தால் அக்கல்லூரியின் தலைமை அதிபரின் சிறந்த கடமையே இதற்குக் காரணமாகும். பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இலங்கையிலுள்ள சகல கல்லூரிகளுக்கும் முன்னோடியாக இயல், இசை, நாடகம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்குவதை அறியும்போது நாம் உண்மையில் பெருமிதம் அடைகின்றோம். இதற்கெல்லாம் காணகர்த்தா கல்லூரித் தலைவியேயாகும்'' என்று பண்டத்தரிப்பு மகளிர் உயர்நிலைப் பாடசாலைத் தலைவியாகப் பணி புரிந்து ஓய்வு பெறும் செல்வி ஈ. கே. மதியாபரணத்துக்கு பண்டத்தரிப்பு மக்கள் கல்லூரி திறந்த வெளியரங்கில் அளித்த பிரிவுபசார வைபவத்தின்போது வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறினர்.

திருமதி பேஸி. அத்தனாசியார் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

ஒருவருடைய வாழ்வில் இருபது வருடம் என்பது மிகவும் முக்கிய காலமாகும். செல்வி மதியாபரணம் தமது வாழ்வை கல்லூரியின் வளர்ச்சிக்காக கடந்த இருபது ஆண்டுகள் செலவு செய்துள்ளார் என்பதை அறியும்போது அவர் பல ஆக்கப் பணிகளைப் புரிந்துள்ளார் என்றே கூறவேண்டும். செல்வி மதியாபரணம் கடந்த காலங்களில் கல்லூரி வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டு உழைத்தது போல வருங்காலத்தில் தமது சேவையை சமூகத்தின் பணிக்காகச் செலவு செய்து தமது திறமையைப் பயன்படுத்த முன்வரவேண்டும்.''


வண. கலாநிதி ச. குலேந்திரன் பேசுகையில், ''இன்று

(5-ம் பக்கம் பார்க்க)


ஒரு பிரபலமான டுப்பிளிகேட்டரின் பிரபலமான மொடல் சகாயமானவிலைக்கு உண்டு

M2

REX-ROTARY



எம்2 — விசேஷ அம்சங்கள்

காகிதங்கள் வைக்கும் பெட்டியில் 250 காகிதங்கள் வைக்கலாம். தபால் அட்டையிலிருந்து முழு அளவுக் காகிதம் வரையான எந்த அளவுள்ள காகிதத்திலும் பிரதிகள் எடுக்கலாம்.

உயரம், ஓரம் ஆகிய நிர்ணயங்களை இலகுவில் செய்யலாம். விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்யக்கூடியது. ஸ்டென்சில் வேட்டுகள் செய்யக் கூடிய வகையில் சரி செய்யலாம்.

கௌண்டரில் நான்கு இலக்கங்கள் உண்டு. விரும்பினால், ஒற்றைக் கணக்கை மாற்றி சைபர் ஆக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கையைச் சரியாகக்கணக்கிடுகிறது. இயந்திரம் இயங்காதிருக்கும்போது கிராங்கின் சுழற்சிமுறை மாற்றுப் பொறி சுழற்சி எண்ணிக்கைகளை இது கணக்கிடுவதில்லை.

இத்தனை சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன் கூடிய எம்—2 இன் விலை குறைவானதே. பாவிக்கும்போதும் அதிக செலவு ஏற்படுவதில்லை. இதனால்தான் எம்—2 இன் விலைக்கு அது விரைவில் நல்ல சேவைபுரிகிறது.

எம்—2 மாற்றிய இன்னும் அதிகம் கூறலாம். உங்களுக்குக் கஷ்டமின்றி எவ்வளவுதூரம் அது சேவை செய்யும என்பதை நீங்கள் அறியவேண்டும். தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் எம்முடன் தொடர்புகொண்டால், எம்—2 வேலை செய்யும் விதத்தை உங்களுக்கு உங்கள் காரியாலயத்திலேயே காண்பிப்பதில் மகிழ்ச்சியடைவோம்.

விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

ஆபீஸ் இக்கியுப்மெண்ட் லிமிட்டெட்
(OFFICE EQUIPMENT LTD.)

ஐஸ்லண்ட் கட்டிடம், கொழும்பு — 3.

தொலைபேசி: 6168
தந்தி: ஆபீஸ் எக்யுப்






லக்ஷபான பாட்டரிகள்

இறக்குமதியாகும் எந்த பாட்டரியையும் விட குறைந்த செலவில் கூடிய சேவை தருகின்றன.

ஏனெனில்:

★ அவை, பூரண சக்தியுடன தொழிற்சாலையிலிருந்து புதுமை குலையாமல் உங்களை வந்தடைகின்றன. இறக்குமதிபாட்டரிகள் போல சேமிப்பில் இருப்பதால் அவை சக்தி இழப்பதில்லை

★ லக்ஷபானபாட்டரிகள், சர்வதேச மின் நுணுக்க கமிஷன்விதிக்கும் தரங்களுக்கு நிகரான, அதி உன்னத சிறப்பு வாய்ந்தவை என்று பரீட்சித்து நிருபிக்கப் பட்டவை.

★ லக்ஷபான பாட்டரிகள் இறக்குமதியாகும் எந்த ரகங்களையும் விட மிக மலிவானவை.

எவிஃபண்ட் லைட் கார்ப்பரேஷன் லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## பிரிவிடுதல் நொத்தீஸ்

சாவகச்சேரி டிஸ்டிறிக் கோட்டில்
பளை, பெரியபளை தம்பா பிள்ளை வேலுப்பிள்ளை.
—வழக்காளி
எதிராக
இல. 3102/8
1 செம்பியன் பற்று செல்லையா ஐயாத் துரையும் பெண்
2 சிவக்கொழுந்துவும்
3 மாசார் கணபதிப் பிள்ளை நாகமணி
4 குருநாகல் தபாலா பீஸ் சிவயோகநாதன் பெண் உதயநாயகியும்
5 ஷை செல்லத்துரை சிவயோகநாதன்
6 அலற்கமம் சாகிராக் கல்லூரி கந்தையா இராசரத்தினம்
7 இயக்கச்சி கொத்தாண்டார் குளம் கந்தையா கைம்பெண் சிதம்பரம்.
எதிராக
பராபரிப்புக்காரி
பராயமற்றவர்
8 ஷை கந்தையா செல்வரத்தினம்
9 ஷை கந்தையா நவரத்தினம்
10 மாசார் கணபதிப் பிள்ளை வேலுப்பிள்ளை
11 புலோப்பளை நிலையிஞர் கோபாலு
12 மாசார் சிதம்பரப் பிள்ளை சேனுதிராசா
13 பளை தன் மக்கேணி தோட்டம் தாமோதரம்பிள்ளை சோமசுந்தரம்
14 மாசார் தாமோதரம் பிள்ளை வடிவேலு
பராய மற்றவர்
15 ஷை கணபதிப்பிள்ளை மயில்வாகனம்
16 ஷை கணபதிப்பிள்ளை பரமு
17 மல்வில் சின்னத்தம்பி சின்னப்பா
18 ஷை சின்னப்பா மகன் சிவநாயகம்
19 ஷை சின்னப்பா மகன் தவயோக செல்லகுல சிங்கம்
20 மாசார் சின்னையா கார்த்திகேசு
21 ஷை விசுவலிங்கம் பெண் பொன்னு
22 ஷை வல்லிபுரம் விசுவலிங்கம்
23 ஷை சுப்பர் குளந்தையர்
24 வத்திராயன்ஆழ்வாப் பிள்ளை பெண் இரத்தினம்
25 ஷை கணபதிப்பிள்ளை ஆழ்வாப்பிள்ளை
26 வவனிக்குளம்சின்னட்டியர் வேலுப்பிள்ளை
27 மாசார் வேலுப் பிள்ளை சின்னையாவும் பெண்
28 வள்ளிப்பிள்ளையும்
29 மாசார் சின்னத்தம்பி பெண் அன்னபூரணம்
30 ஷை ஏரம்பு சின்னத் தம்பி
31 கல்மடு கனகசிங்கம் பெண் தங்கம்
32 ஷை ஆறுப்பிள்ளை கனகசிங்கம்
33 மாசார் சின்னத்தம்பி நாராணபிள்ளை
—எதிராளிகள்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் பச்சிலைப்பள்ளிப்பகுதிபுலோப்பளைக்கோவிற்பற்று மாசார் இறைளரியாக் குளங்கரை வயல் நெ. ப. 150 எல்லை கிழக்கு எரியாக்குளம் வடக்கு விசுவலிங்கம் பெண் நாகமுத்து பங்கும் மேற்கு மட்டிக் கோட்டைக்குளம் தெற்கு ஒழுங்கை என்னும் ஆதனம் அல்லதுஆதனங்களை 1951ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற்கட்டளைச்சட்டத் திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்குத் தொடர்ந்திருக்கி தென்று இத்தாலுமக் கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1966-ம் ஞூ பங்குனி மீ 31-ம் திகதி 9 மணிக்குச் சமூகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறுர்கள்.

இக்காணியில் உரிமை கோருபவர்கள் 1966-ம் ஆண்டு பங்குனி மீ 31-ந் திகதி மேற்படி கோட்டில் வெளிப்பட்டு தங்கள் உரிமையைக் கூறும்படிகேட்கப் படுகின்றனர்.

கோட்டுக் கட்டளைப்படி
செ. சடாச்சரம்
செயலாளருக்காக.

தயாரித்தவர்:
க. கதிர்காமசேகரர்
வழக்காளியின்வழக்கறிஞர்.
13-2-66

இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக் குழு நடத்தும் பாடசாலைகளுக்கான

### நாடகப்போட்டி 1966

15-5-66 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும். விதிகளுக்கு 10-4-66க்கு முன்னர் செயலாளர், இலங்கைக் கலைக் கழகம், 135, தர்மபால மாவத்தை, கொழும்பு 7 என்ற முகவரிக்கு எழுதுக. 2045

### கல்வி

திறமையான போதனையின் பலன் திறமையான சித்தி. ஜி.ஏ.கியூ. கடந்த கால வினுவிடைகள் இலக்கிய வரலாறும் இலக்கணமும், பொருளாதார தத்துவங்கள், ஆங்கில பொருளாதார வரலாறு. பிரதிஒன்றுக்கு ரூபா 20/-
ஐக்கிய கலாசாலை,
நெல்லியடி, :: கரவெட்டி. A





### கொழும்பு

புதன் 16 - 3 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 61 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து.
இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 பாட்டு, 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 புல்லாங்குழலும் கிளாரினெட்டும், 9-30 பாட்டு, 10-00 நேயர் விருப்பம்.

## புதுவருடத்துக்கு போதிய துணி

பம்பலப்பிட்டி, செவ்வாய்
தமிழ் - சிங்கள புதுவருடத்தின்போது பாவனையாளர்களுக்கு போதிய அளவு துணிமணிகள் கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. சுமார் 5 கோடி யார் ஜவுளியை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் செய்து வருகின்றது.

## சிதம்பரா வெற்றி

வல்வெட்டித்துறை, செவ்.
வடமராட்சிக் ஆசிரியசங்கத்தின் ஆதரவில் வடமராட்சி கல்லூரிகளுக்களுக்கிடையே நடைபெற்று வரும் கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சிதம்பராக் கல்லூரி உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியை 3—2 ஆட்டங்களால் வென்றது. சிதம்பராக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் இறுதி வரை எக்கோஷ்டி வெற்றி பெறும் என்று சொல்லமுடியாத அளவிற்கு இருதரப்பினரும் விட்டுக்கொடுக்காது விறுவிறுப்பாக விளையாடினர்கள்.
திரு. எஸ். சிதம்பரநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## கி மு. சங்கக் கூட்டம்

தாளையடி, செவ்வாய்
தாளையடி கிராம முன்னேற்றச் சங்கப் பொதுக் கூட்டம் தாளையடி சனசமூக நிலைய மண்டபத்தில் தலைவர் திரு. சி எஸ். ஏ. செபமாலை தலைமையில் நடைபெற்றது கூட்டத்தில்கிராமத்தில் சிறுகைத்தொழில்களை எப்படி வளர்ச்சியடையச்செய்யலாம் என்பது பற்றி ஆராயப்பட்டு முடிவில் சில தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன.

## ஐயா றன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனல் இலங்கையில் உற்பத்தியாகும் தேயிலை, தேங்காய் எண்ணெய், பிஸ்கோத்து, கொட்டைப் பாக்கு முதலியவற்றை ஓரளவு கொண்டுசெல்ல அனுமதிக்கிறுர்கள். இலங்கைக்குச் செலாவணிக் கஷ்டம் அதிக முள்ளதுதான் வெளிநாடுகளிலிருந்து இங்கு வரும் சரக்குகளை தடையின்றி கொண்டுசெல்ல அனுமதிக்க முடியாதுதான். ஆனல் சிகிச்சைக்காகச்செல்லும் இலங்கை நோயாளர்கள் சொந்தப் பாவனைக்குக் கொண்டு செல்லும் பால் உணவையும் தடுக்கத்தான் வேண்டுமா? கஸ்டம்ஸ் அதிகாரிகள் சிறிது பகுத்தறிவும் மனிதாபிமானமும் காட்ட முடியாதா?

ஃ ஃ ஃ

நன்றுடையானைத் தீயதில்லானை நரை வெள்ளேறு, ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச், சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக், குன்றுடையானைக் கூற என்னுள்ளங் குளிரும்மே.
-திருஞான சம்பந்த சுவாமிகள்

## கல்லூரி . . .

(4-ம்பக்கத்தொடர்ச்சி)

அரசியல்வாதிகளாக விளங்கும் எம். பி.க்கள் நாட்டின் பல வேலைகளைக் கவனிக்காது ஆசிரியர் விஷயத்தில் மட்டுமே காலத்தைக் கழிக்கிறுர்கள். கல்லூரி அதிபர்களாக இருக்கும் அநேகர் மிகவும் கஷ்டப்படுகின்றுர்கள். ஆனல் இவற்றுக்கெல்லாம் எதிர்மாருக செல்வி மதியாபரணம் கல்விப் பகுதியினருடனும் பெற்றோர்களுடனும் மாணவிகளுடனும் ஒத்துழைத்து கடமையை மிகவும் சிறப்பாகச் செய்துள்ளார் என்றுல் அவருடைய நிர்வாகத் திறமையே காரணமாகும்'' என்று கூறினர்.

செல்வி ஏ. எச். பரசாமி, திரு. எஸ். கனகசுந்தரம், இ. இராமலிங்கம், செல்வி கட்சன் பரமசாமி, முதலியார் வி. மகேசன் ஜே. பி. உட்பட பலர் பாராட்டுரை வழங்கினர். தமக்களித்த பிரிவுபசரணைக்கு செல்வி ஈ.கே. மதியாபரணம் நன்றி தெரிவித்துப் பேசினர். கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.


# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அல்லைப்பிட்டி மூன்று முடியம்மன் கோவிலுக்குப் போகும் புது றேட்டுக்கு அருகாமையிலுள்ள கொக்கிழச்சி என்னும் காணி (பரப்பு 50) விற்பனைக் குண்டு. விபரங்களுக்கு: எஸ். போல், நாரந்தனை, ஊர்காவற்றுறை. 2162

நல்ல நிலைமையிலுள்ள C V 1482 மொறிஸ் கௌவுளி வான் விற்பனைக் குண்டு. ரூபா 4000/- பிஞன்சில் இருக்கின்றது. பேசாலை சிறிபரதன் பட மாளிகையில் பார்வையிடலாம். 2169

நல்ல நிலையிலுள்ள CL 655 லோட்மாஸ்ரர் லொறி விற்பனைக்குண்டு. 73, 1-ம் குறுக்கு வீதியிலுள்ள யாழ். நகர் ஐக்கிய லொறிப் போக்குவரத்துச் சங்கத்தில் காலை 9 தொடக்கம் மாலை 4-30 வரையும் பார்வையிடலாம். விபரங்களுக்கு: வி. சிங்காரம். 7/1 அன்னசத்திர ஒழுங்கை, கந்தர் மடம், யாழ்ப்பாணம். 2129

பாவிப்பிலுள்ள ஆறு குதிரைப் பலம் லிஸ்றர் டீசல் நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு. தெல்லிப்பழை ஐக்கியவைத்திய சாலையில் பிற்பகல் 4-30 மணி முதல் 5-30 மணி வரையும் பார்வையிடலாம். 2168

ஒஸ்றின் கேம்பிறிச் என்ஜின் ஸ்டாண்டட் சையிஸ்; விபரம்: S. சந்திரதேவ, 7-ம் கட்டை ஒழுங்கை, கே. கே. எஸ். றேட், மல்லாகம். 2173

### காணவில்லை

மானிப்பாயிலிருந்து சுன்ஞகம் செல்கையில் நாகர் மாணிக்கம் என்பவரின் பஸ் லொறி லைசன்ஸ், இல. D/L 46917 காணுமற்போய்விட்டது. இதைக் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் சமர்ப்பிப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப் படும். 2170

### கண்டெடுக்கப்பட்டது

பாலைதீவு அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் இருந்து வரும்போது ஒரு கைக்கடிகாரமும், சங்கிலியும் கண்டெடுக்கப்பட்டது. உரியவர் அத்தாட்சியுடன் கீழ்க்காணும் விலாசத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யோ. யோகம், 24, சென்றல் கிழக்கு வீதி, றெக்ளமேசன், கரையூர். 2174

### வாடகைக்கு

புல்டோசர்: கற்றப்பில்லர் இனமே பாரமான வேலைக்கு உகந்தது. காடு பிரட்டவோ, மட்டம் தட்டவோ, வரம்பு போடவோ நாம் உடனடியாகச் செய்வோம். புல்டோசர் நிலையம், வெலிக்கண்டல் சந்தி, கண்டாவளை. 2161


## பாடசாலையின் அவல நிலை

தாளையடி. செவ்வாய்
செம்பியன்பற்று றே. க. பாடசாலைக் கட்டடம் மிகவும் அபாயகரமான நிலையிலிருக்கின்றது. தூண்களிலும் சுவர்களிலும் பெரும் வெடிப்புகாணப்படுவதுடன் கூரையும் சேதமடைந்துள்ளது. இது குறித்து பெற்றோர்-ஆசிரியர் சங்கம் வட பிரதேச உதவி வித்தியாதிபதிக்கும், பருத்தித்துறை எம். பி.க்கும், பகுதி வட்டார வித்தியாதரிசிக்கும், மகஜர் அனுப்புவதெனவும் திரு. க. துரைரத்தினம் எம். பி. மூலம க வடபிரதேச வித்தியாதிபதியைப் பேட்டி காண்பதெனவும் தீர்மானித்துள்ளது.

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், செவ்.
மானிப்பாய் கோயிற்பற்று சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலையத்தலைவர்சமூக ஜோதி சி. தியாகராசா தலைமையில் நடைபெற்றபோது நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப்பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டனர். போஷகர்- திரு. சி. தியாகராசா, தலைவர்- திரு.கே. முத்துவேற்பிள்ளை, உபதலைவர்கள்- திருவாளர்கள்- ஜே. பி. நாகலிங்கம், எஸ். நாகராசா, கே. சோமாஸ்கந்தன். காரியதரிசி- திரு. எம். நவராசசிங்கம், உபசெயலாளர்-திரு ஆர். பாலச்சந்திரன், பொருளாளர்-திரு. வி. தியாகராசா, கணக்காளர்- திரு.எஸ். சரசானந்தராசா.

## சென்னை கவர்னர்

சென்னை, மார்ச் 15
சென்னை ராஜ்ய கவர்னர் ஜெய சாமராஜ உடையார் சுகவீனம் காரணமாக இம்மாத இறுதிவரை விடுமுறையில் இருக்க முடிவு செய்திருக்கின்றுர். தற்காலிக கவர்னராக இருந்து வரும் திரு சந்திரா ரெட்டி தொடர்ந்து இம்மாத இறுதிவரை கடமையாற்றுவார் என்று அறிவிக்கப்பட்டது.


போன்: 7099
றொலறூம்ஸ்
இருப்பு எடுக்கும் மலிவு விற்பனை
உயர்ந்த ரகம் உன்னத சேவை
வேண்டிய தினுசுகளை
ஒரே முறையில் தேர்ந்து எடுக்க
ஒரே ஸ்தாபனம்
றொலறூம்ஸ்
46, பெரிய தெரு. யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலை கொலைவழக்கு விசாரணை ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், செவ்வாய்

இளவாலையைச் சேர்ந்த வீரகத்தி கணபதிப்பிள்ளை என்பவர் சென்ற வருடம் அக்டோபர் மாதம் இருபத்தியொன்பதாம் திகதி தனது மனைவியான சங்குபதியை கொலைசெய்ததாக சங்கானைப் பொலிஸாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்டவழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துறுபாரு முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

காங்கேசன்துறை பொலிஸ் குற்றப்பிரிவைச் சேர்ந்த சார்ஜண்ட் சின்னையா சாட்சியமளிக்கையில் தான் சம்பவநேரம் சங்கானைப் பொலிஸில் கடமையாற்றியதாகவும் அன்றிரவு ஒன்பதரை மணியளவில் கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்து தான் எதிரியின் வீட்டிற்குச் சென்றதாகவும் அங்கு எதிரி நின்றதாகவும் எதிரியின் மனைவியின் பிரேதம் பிரேதப் பெட்டிக்குள் இருந்ததாகவும் தான் இருசாட்சிகளின் சாட்சியங்களைப் பதிவுசெய்தபின் எதிரியைக் கைதுசெய்ததாகவும் கூறினார்.

நீதிபதிமேல்விசாரணையை இம்மாதம் இருபத்தியொன்பதாம் திகதிக்கு ஒத்திவைத்து எதிரியை பழைய பிணையில் செல்லும்படியும் அத்திகதியில் கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

சங்கானை பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. மெண்டிஸ் வழக்கை நடத்தினார். எதிரிதரப்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.


**நியூ காலிங்கஸ்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
**பெரிய இடத்துப்பெண்**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
அதட்ட வடிய ஹெற்ர
ஹொந்தாய் (சிங்களம்)
4-15க்கு மட்டும்
டு கச் ஏ தீவ்

REGAL—JAFFNA
NOW SHOWING!
Cary Grant, Doris Day
in
THAT TOUCH OF MINK
(Panavision - color)


## அறுவடை நாசம்

மட்டக்களப்பு, செவ்.

மட்டக்களப்புப் பகுதிகளில் மழை தொடர்ந்து பெய்வதால் பருவநெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது பங்குனி, சித்திரை மாதங்களில் தான் இப்பகுதிகளில் வேளாண்மை அறுவடை நடைபெறுவதால் தற்போது தொடர்ந்து பெய்யும் மழை அறுவடைக்குக் குந்தகம் விளைவிப்பதாகத் தெரிகிறது. அறுவடை செய்யப்பட்ட வேளாண்மை மழை வெள்ளத்தில் மிதந்தழியும் காட்சியை இப்பொழுது மட்டக்களப்புப் பகுதிகளில் காணக்கூடியதாக இருக்கிறது.


**வெற்றிகரமான 4வது வாரம்!**

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு) |
| விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) | மொடேர்ன் (பதுளை) |
| மொடேர்ன் (பண்டாரவளை) | விஜிதா (அட்டன்) | வெலிங்டன் (யாழ்ப்பாணம) |



நாகேஷ் கே. ஆர். விஜயா
முத்துராமன், எஸ். ராமராவ், காஞ்சனா
நடித்த
**சர்வர் சுந்தரம்**


## மந்திரிக்கு தமிழரசுக் கிளை கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாநகரசபையை உடனடியாகக்கலைத்து விசேஷ ஆணையாளரின் நிர்வாகத்தின்கீழ் சில காலம் விடுமாறு கோரி இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வண்ணார்பண்ணைக் கிளை உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வத்துக்கு மகஜர் ஒன்று அனுப்பியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற கிளையின் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானம் வருமாறு:

யாழ். மாநகரசபையின் நிர்வாகம் அடிக்கடி மேயர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் வருவதாலும், கோஷ்டி மனப்பான்மையாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் வரியிறுப்போர் பாதிக்கப்படுவதுடன் இந்நகரமும் கேவல நிலைக்குள்ளாகியிருக்கின்றது. சந்தர்ப்பங்களைத் தமக்குச் சாதகமாக்கி தங்கள் நலங்களைப் பெருக்கிக்கொள்ளும் ஒரு சில மாநகரசபை உறுப்பினர்கள் மக்களின் பொதுப் பணத்தைக்கூட பாரபட்சமின்றி பொதுநலனுக்கு உபயோகப்படவிடாது, தத்தமக்கு வாய்த்த வகைகளில் செலவிடப்படுவது யாவரும் அறிந்தது. ஆகவே இம் மாநகரசபையை உடனடியாகக் கலைத்து விசேட ஆணையாளரின் நிர்வாகத்தில் சில காலம் விடவேண்டுமென்று இக்கிளை கோருகிறது. அதனுடன் ஒரு விசாரணைக்கமிஷன் நியமித்து இத்தவறுகளை விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் இச்சபை கோருகின்றது.

## சதிக்குழு...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

திருக்கலாம். அரசாங்கத்துக்கெதிராகச் சதிசெய்தது குறித்து எனக்குத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை. இது உறுதி. நான் அப்படி அரசாங்க ஊழியருக்கோ பெப்ரவரி 17ல் கூறியது கிடையாது. என்னைத்தவிர அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரும் மற்றொருவரின் மனைவியும்தங்கியிருந்தனர்.

அந்தச் சமயத்தில் குறுக்கெழுத்துப்போட்டி பற்றியும் சதுரங்க விளையாட்டுப் பற்றியும் பேச்சுவார்த்தை எழுந்தது. ஆபிரிக்க நாடுகளில் வாரத்துக்கு இரண்டு முறை நடைபெறும் சதிபற்றியும்பேசப்பட்டது. சோதிடம் குறித்தும் பேசப்பட்டது.

பிரதமர் டட்லி சேனநாயக்கா அமெரிக்கா சென்றது இப்படியான கெடுதியான காலத்தைக் கழிப்பதற்காகத் தானென்றும் கெட்டகாலம் வரையும் அவர் அங்கு தங்கலாமென்றும் அங்கு பேச்சுவார்த்தையின்போது கூறினேன். அரசியல் கலப்பற்ற இன்னும் பல்வேறு விஷயங்கள் குறித்தும் பேசினோம்.

செனட்சபை முதல்வர்பேசுகையில் திருசூசாஏற்கனவே தயாரிக்கப்பட்ட தமது அறிக்கையில் வெகுசாதுர்யமாகத் வெளிவித்துள்ளாரெனவும் திரு. சூசா சபையில் கூறியதற்கும் அவரோடுகூட இருந்த மற்ற இருவர் கொடுத்த வாக்குமூலத்துக்கும் முரண்பாடுகள் இருப்பதாகவும் கூறினார்.

## பூட்டோ ஜாகர்த்தா செல்வார்

ஜாகர்த்தா, மார்ச் 15

பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ வெகு விரைவில் இந்தோனேஷிய தலைநகரான ஜாகர்த்தா செல்வார் என்று தெரிய வருகின்றது. இந்த விஜயத்தின் நோக்கம்பற்றி எதுவித தகவலும் இல்லை.

# உடுப்பிட்டி கி. ச. தேர்தல் நியமனப்பத்திரங்கள் தாக்கல்

வல்வெட்டித்துறை, செவ்.

உடுப்பிட்டி கிராமசபையின் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தேர்தல் அதிகாரி திரு. எம். எஸ் இராஜசிங்கம் முன்னிலையில் இன்றுகாலை தாக்கல் செய்யப்பட்டன.

மொத்தம் 24 வட்டாரங்களிலும் ஒரு பெண்மணிஉட்பட 53 பேர் போட்டியிடுகின்றனர். 9-ம் வட்டாரத்தில் திரு சி சிவராசா என்பவர்தமிழ்க்காங்கிரஸ் கட்சி சார்பிலும் 10-ம் வட்டாரத்தில் திரு செ அரியரத்தினம் தமிழரசுக்கட்சி சார்பிலும் மற்றையோர் கட்சிச் சார்பற்ற முறையிலும் போட்டியிடுகின்றனர். 5 வட்டாரங்களில் அபேட்சகர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அபேட்சகர் பட்டியல் வருமாறு: 1-ம் வட்டாரம். க. பொன்னுச்சாமி, கி. கணபதிப்பிள்ளை. கு. பொன்னம்பலம், வ. கிட்டிணர், 2-ம் வட்டாரம்: பொ வேலுப்பிள்ளை, க குலசிங்கம், 3-ம் வட்டாரம்: கி தணிகாசலம். க கிட்டிணர், 4-ம் வட்டாரம்: வ இளையதம்பி, ம முத்துக்குமாரு, 5-ம் வட்டாரம்: பா தாமோதரம்பிள்ளை (போட்டியில்லை) 6-ம் வட்டாரம். வே செல்வரத்தினம், த பரமசாமி, 7-ம் வட்டாரம் காசிவலிங்கம் (போட்டியில்லை) 8-ம்வட்டாரம் ஆர் ஆர் தர்மரத்தினம் (தற்போதைய தலைவர்) ந பொன்னுத்துரை, 9-ம் வட்டாரம்: சி சிவராசா, சி தம்பித்துரை, சி மார்க்கண்டு, 10-ம் வட்டாரம்: செ அரியரத்தினம், சி ஈஸ்வரலிங்கப் பெருமாள், க அழகதுரை, 11-ம் வட்டாரம் இ சிவதாஸ், ஆ விசாகரத்தினம், 12-ம் வட்டாரம் எஸ் முத்துலிங்கம், ம துரைச்சாமி, வி சிவானந்தஐயர், 13-ம் வட்டாரம்: திருமதி மு தேவசி 19-ம் வட்டாரம்: வ சோமசுந்தரம் (போட்டியில்லை) ரோன்மணி, சு. தம்பு. 14-ம் வட்டாரம்: பொ கணேசு, தாசிவம், க பஞ்சாட்சரநாதன், 15-ம் வட்டாரம்: கி சின்னராசா, ச குமாரசுவாமி, சு கனகலிங்கம், 16-ம் வட்டாரம்: சி இரத்தினசபாபதி, சி பொன்னுத்துரை, 17.ம்வட்டாரம் சி கந்தசாமி, சோ சிவராசா, மு துரைச்சாமி, 18-ம்வட்டாரம் ச சுப்பிரமணியம் (போட்டியில்லை) 20-ம் வட்டாரம்: க, சுப்பிரமணியம், வ இராசதுரை 21-ம் வட்டாரம்; செ திருநாவுக்கரசு. மு இளையதம்பி, 22 ம் வட்டாரம்: க அண்ணாமலை, த. நவரத்தினம், சி. கணபதிப்பிள்ளை, 23-ம் வட்டாரம்: சி மாணிக்கம், க அப்புக்குட்டி, ஆ குட்டி, 24-ம் வட்டாரம்; க இராசதுரை (போட்டியில்லை)

## எதிர்க் கட்சிகளின் ஆட்சேபம்

கொழும்பு, செவ்.

ஜனாப் ஏ. சி. எம். அமீரை அட்டோர்னி ஜெனரலாக நியமித்ததை ஆட்சேபத்து பார்லிமெண்டில் எதிர்க்கட்சியினர் ஒரு பிரேரணையைக் கொண்டுவரவிருக்கின்றனர். இதற்கான பிரேரணை ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

## பட்டப்பகலில் துணிகரத்திருட்டு!

கொழும்பு, செவ்.

கொட்டாஞ்சேனையில் ஒரு நபர் பட்டப்பகலில் வீட்டிற்குள் புகுந்து தாலிக்கொடியைப் பறித்துச் சென்ற சம்பவம் நிகழ்ந்துள்ளது.

செட்டியார் தெருவில் உள்ள ஒரு வர்த்தகரின் மனைவி கொட்டாஞ்சேனை மேபீல்ட் லேனில் தமதுவீட்டில் குழந்தையுடன் தனித்திருந்தபோது இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

மத்தியானம் 2 மணியளவில் காற்சட்டை அணிந்த ஒரு நபர் திடீரென வீட்டிற்குள்வந்து கதவைச் சாத்திக்கொண்டார் என்றும் குறிப்பிட்டபெண்ணிடம் சென்று அவரின் கன்னத்தில் பலமுறை அறைந்துவிட்டு அவரின் 21 பவுன் கொண்ட தாலிக்கொடியையும், சங்கிலியையும், தங்க காப்புகளையும் எடுத்துக்கொண்டு மறைந்துவிட்டார் என்றும் சொல்லப்படுகிறது.

பொலிசார் இதுபற்றிப் புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். இதுசம்பந்தமாக எவரும் கைதுசெய்யப்படவில்லை.

## சைக்கிளை வழிப்பறி செய்தாராம்

வல்வெட்டித்துறை, செவ்

செல்லப்பா இளையதம்பி என்பவர் தொண்டமானாற்றிலிருந்து உடுப்பிட்டிக்குச் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கையில் உடுப்பிட்டி மொட்டைப் புளியடிக்கு அண்மையில் வல்லிபுரம் கதிரவேலு என்பவர் அவரைத் தாக்கிவிட்டு அவரது சைக்கிளைப் பறித்துக் கொண்டு சென்றதாகவும் அவர் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு கொடுத்ததாகவும் இதைத் தொடர்ந்து பொலிஸார் உடனே சந்தேகநபரின் வீட்டிற்குச் சென்று சோதனை செய்ததன்பேரில் குறிப்பிட்டவரின் சைக்கிள் அங்கு காணப்பட்டதாக அறியப்படுகிறது. இதுசம்பந்தமாக சார்ஜண்ட் எம். பி. அமிர்தநாதன் வ. கதிரவேலுவைக் கைதுசெய்துள்ளார். சைக்கிள் தற்போது பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள.


## திருமண அழைப்பிதழ்

அராலியைச் சேர்ந்த அப்பாத்துரை அவர்களின் புதல்வன் திருநிறை செல்வன் ராஜரத்தினம் (இ. போ. ச. சாரதி) 'ராஜ்'வில் லா', அராலி மேற்கு, வட்டுக்கோட்டை) அவர்களுக்கும் இளவாலையைச் சேர்ந்த கந்தவனம் அவர்களின் புதல்வி திருநிறை செல்வி கமலாம்பிகைக்கும் (17-3-66) இரவு 2 மணிக்கும்-4 மணிக்கும் இடையில் வரும் சுபமுகூர்த்தத்தில் திருமணம் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும். 2176

## பகிரங்க அறிவித்தல்
### கிராமசபை, தெல்லிப்பழை
### இறைமதிப்பு வரி

இக்கிராமசபைக்கு இறைமதிப்புவரிவகையால் கட்டவேண்டிய பணம் நிலுவையாக இருப்பின் பணத்தைக் கட்டவேண்டியவர்கள் 31-3-66-க்கு முன் கிராமசபையில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்படி திகதிக்குமுன் கட்டத் தவறியவர்களின் வீட்டிலோ அல்லது வளவிலோ உள்ள அசையுள்ள அல்லது அசைவற்ற பொருட்களைக் கைப்பற்றி கிராமசபை பகிரங்க ஏலத்தில்விற்று பணத்தை எடுக்க நேரும் என்பதை மனவருத்தத்துடன் அறியத் தருகின்றேன்.

த. செல்வரத்தினம்
(த. செல்வரத்தினம்)
தலைவர்
கிராமசபை, தெல்லிப்பழை
2047


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மார்ச்மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org